**12.07.2023 அ.வ.எண்.03/2015 பி.வா.சா.1 ஜப்பு (எ) ஜம்சாத், க/பெ.முஸ்தபா**

**குறுக்கு விசாரணை**

நான் எம்.பி.ஏ பைனான்ஸ் படித்துள்ளேன். வேலை எதுவும் பார்க்கவில்லை. ஏற்கனவே வருவாய் துறையில் பணிபுரிந்தேன் என்பது சரிதான். வழக்கு ஏ அட்டவணை சொத்து வாதிக்கு சொந்தமானது என்றால் அது சரியல்ல. அது என் முன்னோர் சொத்து. வாதியின் தாயார் வாதிக்கு ஏ அட்டவணை சொத்தை 11.04.2003 அன்று செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்றால் அந்த ஆவணம் தவறான சொத்துக்கு தவறான அளவுகளின் அடிப்படையில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை வாதியின் தாயார் 25.01.1984, 03.06.1985 மற்றும் 31.05.1990 ஆகிய தேதிகளில் 3 ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது சரியல்ல. ஏ அட்டவணை சொத்தை செட்டில்மெண்ட் மூலம் பெற்றதிலிருந்து சுவாதீனம் அடைந்து வாதிதான் அனுபவிக்கிறார் என்றால் அப்படி ஏதும் இல்லை. ஏ அட்டவணை சொத்தில் சில பகுதிகளை வாதி 10.05.2012 மற்றும் 28.06.2012 ஆகிய தேதிகளில் கிரையம் பெற்றார் என்றால் அது சரியல்ல. ஏ அட்டவணை சொத்து முழுமைக்கும் வாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. பி அட்டவணை சொத்து அரசு சாலை புறம்போக்கு என்றால் அது சரியல்ல. அது நத்தம் புறம்போக்கு ஆகும். அதில் ஆக்கிரமிப்பு செய்து நான் மெத்தை வீடு கட்டியுள்ளேன் என்பது சரிதான். ஏ அட்டவணை சொத்துக்கு வடக்கில் பி அட்டவணை சொத்து உள்ளது என்பது சரிதான். பி அட்டவணை சொத்தை ஒட்டி உள்ள சாலை வழியாகத் தான் ஏ அட்டவணை சொத்துக்கு செல்ல முடியும் என்றால் அது சரியல்ல. வேறு வழி உள்ளது. அந்த வேறுவழி எங்கு உள்ளது என்பது எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன். ஏ அட்டவணை சொத்திலிருந்து சாலைக்கு செல்ல வாதியின் வீட்டிலிருந்தும், அமானுல்லா என்பவர் வீட்டு வழியாகவும் ஏ அட்டவணை சொத்தின் ஒரு மூலையிலிருந்தும் கூட வழிகள் உள்ளது. பொதுவழி இருக்கும் நிலையில் வாதி ஏன் அமானுல்லா வீட்டு வழியாக செல்ல வேண்டும் எனக் கேட்டால் அங்கு பொதுவழி எதுவும் இல்லை. வாதியே அவரது பத்திரத்தில் எனது வீட்டிற்கு அருகாமையில் நிலத்தை கிரையம் வாங்கியதாக நான்கெல்லை குறிப்பிட்டுள்ளார். நாங்கள் அந்த பகுதியில் 150 ஆண்டுகளுக்கு மேல் வசித்து வருகிறோம். பாதை இல்லாத பகுதியில் வாதி கிரையம் பெற்றுள்ளார். நான் ஏற்கனவே சொன்னது போல வேறுவழிகள் உள்ளன எனக் காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதி கிரையம் பெறும் போது எனது வீட்டை அப்புறப்படுத்தி கொடுப்பதாக சொல்லிதான் கிரையம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் அது சரியல்ல. எனது வீட்டிற்கு அருகில் இருந்த எங்களது பட்டா இடங்களை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு ஆக்கிரமித்து கட்டியுள்ள வீட்டை மட்டும் அப்புறப்படுத்தாமல் உள்ளோம் என்றால் அது சரியல்ல. நாங்கள் அப்புறப்படுத்த வேண்டியதில்லை.

ஏ அட்டவணை சொத்திற்கு உரிய வழியை பி அட்டவணை சொத்தில் உள்ள வீடு முழுமையாக மறிக்கிறது என்றால் அது சரியல்ல. பி அட்டவணை சொத்தில் உள்ள எனது வீட்டை அகற்ற கோரி வாதி வருவாய் துறையிடம் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மனுவின் மீது நடவடிக்கை இல்லை என்பதால் வாதி அ.வ.எண்.89/2013 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் வீட்டை இடிக்க கோரியும் என் பெயரில் பட்டா வழங்கக்கூடாது என்று கோரியும் வாதி வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் வாதி எனக்கு பிரச்சனை கொடுத்தால் நான்தான் முதலில் அ.வ.எண்.28/2013 வழக்கை தாக்கல் செய்தேன். அதன் பின்னிட்டு வாதி அ.வ.எண்.89/2013 வழக்கை தாக்கல் செய்தார். அ.வ.எண்.89/2013 வழக்கின் வழக்குரையை நிராகரிக்க கோரி நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடியானது என்பது சரிதான். அந்த உத்தரவின் பேரில் உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்பது சரிதான். அந்த சீராய்வு மனு தாக்கல் செய்ததே தவறு என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு எனக்கு ரூ.15,000/- செலவுத் தொகை விதித்தது என்றும் அதனை நான் செலுத்தினேன் என்றும் சொன்னால் சீராய்வு மனு தாக்கல் செய்தது தவறு என உயர்நீதிமன்றம் உத்தரவிடவில்லை. ஆனால் காலதாமதமாக மனுதாக்கல் செய்ததால் நீதிமன்றம் அவ்வாறு உத்தரவிட்டது. என் வீட்டுக்கு மின் இணைப்பு கோரி 1991ம் ஆண்டு விண்ணப்பித்தேன். 1992ம் ஆண்டில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. மின் இணைப்பு பெற ஆவணம் எதுவும் கொடுத்தேனா எனக் கேட்டால் ஜமாத் கொடுத்த கடிதம் கொடுத்தேன். வேறு ஆவணம் எதுவும் அந்த காலகட்டத்தில் கேட்கமாட்டார்கள். ஜமாத் கொடுத்த கடிதத்தில் நான் எவ்வளவு காலம் பி அட்டவணை சொத்தில் இருந்தேன் என்பதை குறிப்பிட்டிருந்தார்கள். மின் இணைப்பு கொடுக்கும் போது மின்வாரியம் நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை. பி அட்டவணை சொத்தில் நெடுங்காலம் நான் குடியிருப்பதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் அ.வ.எண்.28/2013 வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் குடிநீர் இணைப்பு கேட்டு விண்ணப்பித்திருந்தேன். ஆனால் வழக்கு நிலுவையில் இருந்ததால் அது வழங்கப்படவில்லை. அந்த வழக்கு எண்.109/2011 ஆகும். அந்த வழக்கில் இந்த வழக்கு பி அட்டவணை சொத்து காட்டப்பட்டதா எனக் கேட்டால் அது விவரம் ஞாபகம் இல்லை. அந்த வழக்கின் தீர்ப்பை முழுமையாக படித்துப் பார்த்தேனா எனக் கேட்டால் முழுமையாகப் படிக்கவில்லை. அ.வ.எண்.28/2013 வழக்கில் இந்த வாதி என்னை தடைசெய்யக் கூடாது என பரிகாரம் கோரியிருந்தேன். 2014ம் ஆண்டில் எனது வீட்டை அகற்றக் கேட்டு வாதி முதலமைச்சருக்கு மனு அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பேரில் வந்தவாசி வட்டாட்சியர் எனது ஆக்கிரமிப்பை நானே அகற்றிக்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார் என்றால் அப்படி எதுவும் எனக்கு வரவில்லை. மேலும் வட்டாட்சியர் உத்தரவின்படி காவல்துறை உதவியுடன் அனைத்து ஆக்கிரமிப்பும் அகற்றப்பட்டது என்றால் அது சரியல்ல.

ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட போது நான் வேறுவீடு பார்த்து செல்லும் வரை ஆக்கரமிப்பில் இருந்த வீட்டை இடிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டோம் என்றும் அதனால் பரிதாபத்தின் பேரில் எனது வீடு மட்டும் இடிக்கப்படவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல.

**(நேரமின்மை காரணமாக தொடர்குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**